**C.C No.5/2022**

**Dated: 29.04.2024**

அ.சா.**1** திருமதி.தேன்மொழி க/பெ.கணபதி

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -

1) ஆஜர் எதிரி எந்த விலாசத்தில் குடியிருக்கிறார் என்ற விலாசம் தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் வீடு தெரியும். எந்த பகுதியில் இருக்கிறார் என்று தெரியுமா என்றால் வையாவூர் போகும் சாலையில் வசிக்கிறார். ஆஜர் எதிரியை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 22 வருடங்களாக தெரியும்.

2) ஆஜர் எதிரி என்ன வியாபாரம் செய்து வருகிறார் என்றால் மார்க்கெட்டில் கருவாட்டு கடை வைத்து தொழில் செய்தும் லாரி வைத்து மணல், செங்கல் ஓட்டும் தொழில் செய்து வருகிறார்.

3) அவர் 22 வருட காலமாக எனக்கு தெரியும் என்பதாலும் அவர் லாரி வைத்து தொழில் செய்து வருகிறார் என்பதாலும் காசோலை தொகை ரூ.5 லட்சத்தை கொடுத்தேனா என்றால் ஆமாம்.

4) எந்த தேதியில் ரூ.5 லட்சம் என்னிடம் பணம் கேட்டார் என்றால் தேதி நினைவில்லை, டிசம்பர் 2018 வருடம் கேட்டார். பணம் கொடுத்த தேதி 18.01.2019 அன்று கொடுத்தேன்.

5) பாண்டு ஏதேனும் எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை. வட்டி ஏற்பாடு ஏதும் உண்டா என்றால் 2 சதவிகித வட்டி கொடுப்பதாக சொல்லி பணம் வாங்கினார். எத்தனை மாதம் ஆஜர் எதிரி வட்டி கொடுத்தார் என்றால் பணம் வாங்கியதிலிருந்து வட்டி கொடுக்கவில்லை.

6) பணம் பெற்றுக்கொண்டு வட்டி கொடுக்கவில்லை கடனுறுதி சீட்டு எழுதி கொடுக்கவில்லை, சட்ட அறிவிப்பு ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. காசோலை திருப்பப்பட்ட பிறகுதான் கொடுத்தேன்.

7) காசோலை எந்த தேதியில் கொடுத்தார் என்றால் 15.01.2021 அன்று கொடுத்தார். காசோலை கொடுத்தபோது தேதி குறிப்பிட்டு கொடுத்தாரா அல்லது உடனடியாக போட சொன்னாரா என்றால் 18.01.2021 என்று தேதி குறிப்பிட்டு கொடுத்தார், அன்றைய தேதியில் போடும்படி சொன்னார்.

8) காசோலையை எப்போது நான் வங்கியில் செலுத்தினேன் என்றால் 18.01.2021 அன்று போட்டேனா அல்லது 19.01.2021 அன்று போட்டேனா என்று நினைவில்லை.

9) 22 வருடத்திற்கு முன்பு குற்றம் சாட்டப்பட்ட நபரை யாரேனும் எனக்கு அறிமுகப்படுத்தினாரா என்றால் அவருடைய அக்கா எங்கள் வீட்டில் குடியிருந்தபோது அவர் அடிக்கடி வீட்டிற்கு வந்து செல்வார், அவருடைய அக்கா மஞ்சுளா என்பவர்தான் அறிமுகம் செய்தார்.

10) நான் 10ம் வகுப்புவரை படித்துள்ளேன். ரூ. 5 லட்சத்தை நான் பணமாக கொடுத்தேனா அல்லது காசோலையாக கொடுத்தேனா என்றால் பணமாகதான் கொடுத்தேன்.

11) ஒரு பெரிய தொகையை காசோலையாக கொடுக்காமல் பணமாக கொடுத்ததற்கு காரணம் என்னவென்றால் அவர் எனக்கு தெரிந்தவர் என்பதால் பணமாக கொடுத்தேன். காசோலை கொடுக்கும்போது எவ்வளவு வட்டி தொகை பாக்கி இருந்தது என்றால் ரூ.2 லட்சத்து 40 ஆயிரம் பாக்கி இருந்தது.

12) ரூ.2,40,000 சேர்த்து காசோலை பெற்றேனா என்றால் அவர் முதலில் ரூ.5 லட்சத்தை கொடுத்துவிடுகிறேன், மீதி தொகையை நான் திரும்பி தருகிறேன் என்று சொன்னார். இதுபோன்று எத்தனை நபர்களுக்கு நான் காசோலை பெற்றுக்கொண்டு பணம் கொடுத்தேன் என்றால் இரண்டு அல்லது மூன்று நபர்களுக்கு கொடுத்தேன்.

13) மொத்தம் எவ்வளவு பணம் வெளியில் கொடுத்தேன் என்றால் அதுகுறித்து நான் கணக்கு செய்யவில்லை. ரூ.5 லட்சத்தை நான் வீட்டில் தயாராக வைத்திருந்து கொடுத்தேனா அல்லது வங்கியிலிருந்து எடுத்து கொடுத்தேனா என்றால் நான் ரூ.3 லட்சத்திற்கு என்னுடைய நகையை அடைமானம் வைத்தும், மீதம் ரூ.2 லட்சத்திற்கு என்னுடைய வீட்டு வாடகையிலிருந்து வந்த வருமானத்திலிருந்தும் என் மகன் சம்பளம் கொடுக்கும் தொகையிலிருந்தும் கொடுத்தேன்.

14) நான் நகையை வைத்து ரூ.3 லட்சம் பெற்றேன் என்பதற்கு அத்தாட்சி ஏதேனும் உள்ளதா என்றால் வங்கயிலிருந்து கணக்கு நடவடிக்கைகள் எடுத்தால் அதில் இருக்கும். என் மகன் சேர்த்து வைத்து பணம் கொடுத்ததாக சொல்வதால் அவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

15) நான் இன்னும் 2 அல்லது 3 நபர்களுக்கு கடனாக பணம் கொடுத்துள்ளதால் வட்டாட்சியரிடமிருந்து ஏதாவது ஆவணம் பதிவு செய்து பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் பணம் கொடுக்கல் வாங்கல் விவகாரம் எத்தனை வருடமாக செய்து வருகிறேன் என்றால் சுமார் 5 அல்லது 6 வருடமாக செய்து வருகிறேன்.

16) இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எந்த தேதியில் எந்த விலாசத்தில் சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் காசோலை திருப்பப்பட்ட உடன் சட்ட அறிவிப்பு அனுப்பினேன், தேதி நினைவில்லை. வையாவூர் விலாசத்திற்கு அனுப்பினேன்.

17) நான் பணம் கொடுக்கும்போது எனது வங்கி கணக்கில் எவ்வளவு இருப்பு இருந்தது என்றால் எனக்கு நினைவில்லை. குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு அசையா சொத்துக்கள் எதாவது உள்ளதா என்றால் வீடு உள்ளது.

18) அ.சா.ஆ.1 காசோலையில் உள்ள தேன்மொழி என்ற பெயரையும் அதில் குறிப்பிட்டுள்ள தொகையையும் தேதியையும் யார் எழுதினார்கள் என்றால் தொகையை மற்றும் தேதியையும் வெங்கடேசன்தான் எழுதினார், பெயரை எழுத்துபிழை ஏதும் வரக்கூடாது என்பதற்காக என்னை எழுத சொன்னார் நான் எழுதினேன்.

19) நான் பெரிய தொகையாக பணம் கொடுக்கும்போது யாரையாவது உடன் வைத்துக்கொண்டு பணம் கொடுத்தேனா என்றால் இல்லை, அவர் சிறிய வயதிலிருந்து எங்கள் வீட்டிற்கு வந்து சென்றுள்ளதால் யார் முன்னிலையிலும் பணம் கொடுக்கவில்லை.

20) நான் துணிக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். மேற்சொன்ன தொகையினை நான் துணிக்கடையிலிருந்து வந்த வருமானத்தை கொடுத்தேனா என்றால் இல்லை.

21) தேவன் என்ற நபரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தேவன் என்பவர் எனக்கு உறவினரா என்றால் இல்லை, எங்கள் குடும்பத்திற்கு நன்கு பரீட்சயம் ஆனவர். தேவன் என்பவரும் லாரி வைத்துக்கொண்டு குற்றம் சாட்டப்பட்ட நபரைபோல மணல், செங்கல் ஓட்டி தொழில் செய்து வருகிறார்.

22) காசோலையை எப்போதும் குற்றசம் சாட்டப்பட்ட நபர் கொடுத்தது கிடையாது என்றால் சரியல்ல. தேவன் என்பவரிடமிருந்து ரூ.2 லட்சம் குற்றம் சாட்டப்பட்ட நபர் பெற்றுக்கொண்டு அவருக்குதான் தேதி குறிப்பிடாத தொகை குறிப்பிடாத காசோலையை பொறுப்பிற்காக கொடுத்தார் என்றால் சரியல்ல.

23) சுமார் 8 வருடத்திற்கு முன்புதான் வழக்கு சம்மந்தப்பட்ட காசோலையை தேவன் என்பவரிடம் கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தேவன் என்பவருக்கும் குற்றம் சாட்டப்பட்டவருக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தினால்தான் தேவன் என்பவர் என்னிடம் கொடுத்து காசோலையை பூர்த்தி செய்து நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

24) தேவன் என்பவர் எனக்கு நன்கு பழக்கமானவர் என்பதால்தான் அவர் என்னிடம் கொடுத்த காசோலையை அவருடன் சேர்ந்துகொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குற்றம் சாட்டப்பட்ட நபர் 22 வருட காலமாக எனக்கு தெரியும் என்பது தவறு என்றாலும் அவர் எப்போதும் எனக்கு அறிமுகம் இல்லாத நபர் என்றாலும் சரியல்ல.

25) குற்றம் சாட்டப்பட்ட நபர் 22 வருடத்திற்கு முன்பாக எனக்கு தெரியும் என்பதால் அவருக்கு அப்போது என்ன வயதிருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தேவன் என்பவர் எனக்கு நன்கு பழக்கம் என்பதால் அவருடைய தூண்டுதலின்பேரில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அவருக்கு பணம் கொடுக்கவேண்டும் என்றால் அவர் வழக்கு தாக்கல் செய்து பணம் பெற்றுக்கொள்ளட்டும், என்னிடம் பெற்ற பணத்திற்குதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

26) அனுமதி இல்லாமல் பணம் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்தது அதுவே குற்றம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய்யான வழக்கு என்றாலும் அவர் எவ்வித பணமும் எனக்கு தரவேண்டியது இல்லை என்றாலும் சரியல்ல.

27) இதுபோன்ற காசோலை வழக்கு 7 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது தவறு. குற்றம் சாட்டப்பட்ட நபர் என்னிடம் எவ்வித பணம் பெறவில்லை என்பதாலும் இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

**மனுதாரர் தரப்பில் மறு விசாரணை -** இல்லை.

Typed to my dictation in Open Court
read over/ Interpreted to the Witness
in the Language which he/she understand
in the presence of the accused or his/her
under and admitted by him/her to be
corrected

J VASUDEVAN

Digitally signed by J VASUDEVAN
Date: 2024.04.29 18:45:46 +0530